/மின் அஞ்சல் வழியாக/

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6

ந.க.எண்.017440/எச்/எப்/ஜி/2018 நாள்.03.08.2018

பொருள்- தொடக்கக் கல்வி-அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆங்கில வழிப்பாடப்பிரிவுகள்- துவங்க அனுமதி அளித்தல்- 2018-2019 ஆம் கல்வி ஆண்டில் தமிழ் வழிப்பாடப்பிரிவிற்கு இணையாக ஆங்கில வழிபாடப்பிரிவு தொடங்க அரசாணை பெறப்பட்டது-சார்பு.

பார்வை- 1.அரசாணை (நிலை) எண்.148 ப.க.(ப.க.6(1)த் துறை நாள்.20.07.2018.

---

பார்வை-1ல் காணும் அரசாணையை அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் கீழ்கண்ட நிபந்தனைகளின் படி தக்க நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.

www.Asiriyar.Net

<u>நிபந்தனைகள்</u>

1. ஆங்கிலவழிப் பிரிவு கோரும் பள்ளிகளில் தற்போது ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தமிழ்வழிப் பிரிவுகளிலிருந்து மட்டுமே ஆங்கிலவழிப் பிரிவுகள் பிரித்து நடத்தப்பட வேண்டும்.
2. ஆங்கிலவழிப் பிரிவு கோரும் பள்ளிகளில் 50% பிரிவுகள் கண்டிப்பாக தமிழ்வழிப் பிரிவுகளாக இருக்க வேண்டும்.
3. அரசாணை (நிலை) எண்.110, பள்ளிக் கல்வி (இ1) துறை, நாள்.29.05.2008-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர்களிடமிருந்து ஆண்டு ஒன்றிற்கு தற்போது வசூலிக்கப்படும் ஆங்கில வழி கற்பிப்பு கட்டணம் (English Medium Tuition Fees) தொடர்ந்து வசூல் செய்யப்பட வேண்டும்.
4. மேற்குறிப்பிட்ட கட்டணத்தை தவிர ஆங்கிலவழி பிரிவுகளில் பயிலும் மாணவர்களிடம் எத்தகைய கட்டணமும் வசூலிக்கக் கூடாது.
5. இதனால் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏதும் ஏற்படக்கூடாது.
6. இத்தகைய பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவு நடத்துவதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இதர வசதிகள் போதுமான அளவில் உள்ளதா என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7. ஆங்கிலவழிப் பிரிவு துவங்கக் கருதும்போது இத்தகைய பள்ளிகளில் ஆங்கில வழியில் கல்வி போதிக்கும் திறன் பெற ஆசிரியர்கள் உள்ளனரா என்பது குறித்து உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மேலும் இதே நிபந்தனைகளின் அடிப்படையில் உதவிபெறும் தொடக்க/நடுநிலைப் பள்ளிகளிலும் ஆய்வு செய்து உரிய அனைத்து தகுதிகளும் நிறைவு பெற்றுள்ள நிலையில் ஆங்கில வழிப்பாடப்பிரிவு தொடங்குவதற்கு இணைப்பில் உள்ள அரசாணை மற்றும் இச்செயல்முறைகளை தத்தம் ஆளுகையில் கீழுள் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர், வட்டார கல்வி அலுவலர்களுக்கு அனுப்பி உடனடியாக அனைத்து நிதியுடதவி பெறும் தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு தெரிவித்திட வேண்டும். மேலும் ஆங்கில வழிப்பாடப்பிரிவு கோரும் பள்ளிகளிலிருந்து பெறும் முன்மொழிவுகள் உரிய படிவத்தில் வட்டாரக் கல்வி அலுவலர்கள் பெற்று சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் வழியாக முதன்மைக் கல்வி அலுவலர்களுக்குக் கருத்துருக்கள் அனுப்பப்படவேண்டும். முதன்மைக் கல்வி அலுவலர்கள் பெறப்பட்ட கருத்துருக்களை பரிந்துரையுடன் உடனடியாக தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுப்பிவைத்திட வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

www.Asiriyar.Net

மேலும் இச்செயல்முறைகள் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டு உடனடியாக ஒப்புதலைப்பெற்றுக் கோப்பில் வைக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

1.அரசாணை நகல்

2.உரிய படிவம்

31/7/2018

தொடக்கக் கல்வி இயக்குநர்

3/8/18

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்

அரசு முதன்மைச் செயலாளர் பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

இணைப்பு படிவம்

உதவிபெறும் தொடக்க/நடுநிலைப்பள்ளிகளில் தமிழ் வழிப்பாடப் பிரிவுக்கு இணையாக ஆங்கில வழிப்பாடப் பிரிவு தொடங்க அனுமதி கோரும் படிவம்

| வ. எண் | விபரம் | அளிக்கப்படும் விபரம் (கருத்துருவின்படி) | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பள்ளியின் பெயர், முகவரி மற்றும் DISE No. | | | | |
| 2 | அ) பள்ளியின் தாளாளர் / செயலாளர் பெயர் மற்றும் முகவரி | | | | |
| | ஆ) முகவாண்மையின் குழுத் தலைவர் பெயர் மற்றும் முழுமுகவரி | | | | |
| 3 | அறக்கட்டளை பதிவு பற்றிய விபரம் | | | | |
| 4 | அ) துவக்க அனுமதி வழங்கிய இயக்குநரின் ஆணை எண் மற்றும் நாள் | | | | |
| | ஆ) ஆரம்ப அங்கீகாரம் வழங்கிய இயக்குநரின் ஆணை எண் மற்றும் நாள் | | | | |
| | இ) தொடர் அங்கீகாரம் வழங்கிய அலுவலரின் ஆணை எண் மற்றும் நாள் | | | | |
| | ஈ) தொடர் அங்கீகாரம் பெற்ற விபரம் (தற்போது வரை) | | | | |
| 5 | பள்ளிக்குரிய மொத்த இடவசதி (பரப்பளவு ஏக்கரில்) | 1. ஏக்கர்<br>2. சென்ட் | | | |
| 6 | மாணவர்கள் எண்ணிக்கை வகுப்பு வாரியாக EMIS Details | வகுப்பு | பிரிவு | பதிவு | வருகை |
| | | 1 | | | |
| | | 2 | | | |
| | | 3 | | | |
| | | 4 | | | |
| | | 5 | | | |
| | | 6 | | | |
| | | 7 | | | |
| | | 8 | | | |
| | | மொத்தம் | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | நிதியுதவி பெறும் வகுப்புகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் விபரம் | தலைமை ஆசிரியர் | பட்டதாரி ஆசிரியர் | இடைநிலை ஆசிரியர் | சிறப்பு ஆசிரியர் | மொத்தம் |
| | | | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | கட்டிட வசதி (வகுப்பறைகள்) | ஆர்.சி.சி மேற்கூரை அமைந்துள்ள வகுப்பறைகள் எண்ணிக்கை | ஆஸ்பெஸ்டாஸ் /மங்களூர் ஓடு வேயப்பட்ட மேற்கூரை அமைந்துள்ள வகுப்பறைகள் எண்ணிக்கை | தரை தளம்/ முதல் தளம்/ /மேல்தளத்தில் நடைபெறும் வகுப்புகள் எண்ணிக்கை |
| | | | | |
| 9 | பள்ளியில் உள்ள தளவாட சாமான்கள் எண்ணிக்கை | பெஞ்ச் | டெஸ்க் | |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | பள்ளிக்கான விளையாட்டு மைதானம் உள்ளதா?<br>அ) இருப்பின், அதன் பரப்பளவு(ஏக்கரில்) | | | |
| 11 | கட்டிடம் மற்றும் விளையாட்டு மைதானம் ஒரே வளாகத்தில் உள்ளதா? | | | |
| 12 | கழிப்பிட வசதி மாணவ/ மாணவிகளுக்கு தனித்தனியாக போதுமானதாகவும் உள்ளதா? | ஆம்/ இல்லை எண்ணிக்கை | | |
| | உள்ளது எனில், | ஆண் | பெண் | மொத்தம் |
| | அ) Urinals | | | |
| | ஆ) Toilet | | | |

மேற்கண்ட வரிசை எண் 1 முதல் 12 வரை உள்ள விவரங்கள் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையிலும், கருத்துருவின் அடிப்படையிலும் விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளது எனச் சான்றளிக்கின்றேன்.

வட்டாரக் கல்வி அலுவலர்

மாவட்டக் கல்வி அலுவலரின்
பரிந்துரை

மேலொப்பம்

முதன்மைக் கல்வி அலுவலர்